பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

01 04 2025 6 30

செவ்வாய்க்கிழமை மாலை

<u>தலைப்புச் செய்திகள்-</u>

- புதிய தேசிய கூட்டுறவுக் கொள்கைக்கு இறுதி வடிவம் கொடுக்கப்பட்டு வருவதாக மத்திய கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு அமித்ஷா தெரிவித்துள்ளார்.
- மீன்வளத்தையும், மீனவர்களின் வருமானத்தையும் பெருக்க மத்திய அரசு சீரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக மத்திய மீன்வளத்துறை அமைச்சர் திரு ராஜீவ் ரஞ்ஜன்சிங் மக்களவையல் தெரிவித்தார்.
- சட்டப்பேரவை உறுப்பினர்களால் பரிந்துரைக்கப்படும் திட்டங்கள் கட்சி பாகுபாடின்றி நிறைவேற்றப்படுவதாக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.
- தமிழகத்தின் கும்பகோணம் வெற்றிலை மற்றும் கன்னியாகுமரி மாவட்டம் தோவாளை மாணிக்கமாலைக்கு மத்திய அரசின் புவிசார் குறியீடு வழங்கப்பட்டுள்ளது.
- ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெற உள்ள ஆட்டத்தில் லக்னோ – பஞ்சாப் அணியை எதிர்கொள்கிறது.

<u>*----- இனி விரிவான செய்திகள் ----*</u>

[]<<<>>>[]

புதிய தேசிய கூட்டுறவுக் கொள்கைக்கு இறுதி வடிவம் கொடுப்பதற்கான நடவடிக்கையை மத்திய அரசு மேற்கொண்டிருப்பதாக மத்திய கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு அமித்ஷா தெரிவித்துள்ளார்.

மக்களவையில் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த அவர், கடந்த 2022–ஆம் ஆண்டு திரு சுரேஷ் பிரபாகர் பிரபு தலைமையில் அமைக்கப்பட்ட குழு இதுவரை 17 கூட்டங்களை நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நடத்தி இதற்கான வரைவு கொள்கையை தயாரித்திருப்பதாகவும், இது நிறைவடையும் தருவாயில் உள்ளதாகவும் கூறினார்.

[]<<<>>>[]

மீன்வளத்தையும், மீனவர்களின் வருமானத்தையும் பெருக்க கடந்த பத்து ஆண்டுகளில் பிரதமர் திரு நரேந்திரமோடி தலைமையிலான அரசு சீரிய நடவடிக்கைகளை எடுத்து வருவதாக மத்திய மீன்வளத்துறை அமைச்சர் திரு ராஜீவ் ரஞ்ஜன்சிங் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இது தொடர்பான கவன ஈர்ப்பு தீர்மானத்துக்கு பதிலளித்து பேசிய அமைச்சர், உலக அளவில் மீன்வளத்தில் இந்தியா இரண்டாவது இடத்தில் உயர்ந்திருப்பதற்கு மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளே காரணம் என்று கூறினார்.

நீல புரட்சியை முன்னெடுத்து செல்வதற்கு பிரதமர் திரு நரேந்திரமோடி மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருவதாகத் தெரிவித்த அவர், மீன்வள மேம்பாட்டு திட்டத்தின் கீழ் இந்த துறையில் உள்ளார்ந்த வளர்ச்சிக்கான திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

மீன்வளம் மற்றும் மீன் வளர்ப்பு கட்டமைப்பு மேம்பாட்டுக்கென தனி நிதியம் ஏற்படுத்தபட்டு நாடு முழுவதும் மீன்வள கடடமைப்பை மேம்படுத்துவதற்கு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

கடந்த 2013-14-ஆம் நிதி ஆண்டில் 95 லட்சம் டன்னாக இருந்த மீன் உற்பத்தி தற்போது 184 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளதையும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.,

முன்னதாக இந்த கவன ஈர்ப்பு தீர்மானத்தின்மீதான விவாத்தில் பேசிய காங்கிரஸ் உறுப்பினர் திரு வேணுகோபால் மீனவர்களின் வருவாய் இன்னும் குறைந்த நிலையிலேயே இருப்பதாகக் கூறினார்.

அக்கட்சி உறுப்பினர் திரு சசிதரூர், கேரளாவில் மீன்பிடி துறைமுகஙகளை அமைப்பதற்கு நவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்று வலியுறுத்தினார்.

திமுக உறுப்பினர் திரு டி ஆர் பாலு, இலங்கை கடற்படையினரால் இந்திய மீனவர்கள் கைது செய்யப்படும் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வுகாண மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனறு கேட்டுக் கொண்டார்.

[]<<<>>>[]

தமிழகத்தில் உள்ள மூன்று பெரிய துறைமுகங்களும், வெளிநாட்டு துறைமுகங்களுடன் இணைக்கப்பட்டுள்ளதாக மத்திய துறைமுகங்கள் மற்றும் கப்பல் துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனாவால் கூறியுள்ளார்.

மாநிலங்களவையில் இதனை தெரிவித்த அவர், சென்னை துறைமுகம் ஆசியா, ஐரோப்பா, ஆஸ்திரேலியா மற்றும் ஆப்பிரிக்க கண்டங்களில் உள்ள பெரிய துறைமுகங்களுடன் இணைக்கப்பட்டு, சரக்கு கப்பல் போக்குவரத்து நடைபெற்று வருவதாக தெரிவித்தார்.

ரஷ்யா, தாய்லாந்து, பங்களாதேஷ் நாடுகள் உடனான வர்த்தகத்தை அதிகரிக்கவும், சென்னை துறைமுகம் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

எண்ணூர் காமராஜர் துறைமுகம், வட அமெரிக்கா, ஐரோப்பா, தென்னாப்பிரிக்கா, கொழும்பு, சிங்கப்பூர் மற்றும் சீன துறைமுகங்களுடன் ஏற்றுமதி இறக்குமதி தொடர்புகளை கொண்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேபோல, தூத்துக்குடி வ உ சி துறைமுகம், மலேசியா, தாய்லாந்து, வியட்நாம், இலங்கை, மாலத்தீவு, மொராக்கோ உள்ளிட்ட நாடுகளின் துறைமுகங்களுடன் சரக்கு போக்குவரத்தை மேற்கொண்டு வருவதாகவும் திரு சர்பானந்த சோனாவால் கூறினார்.

[]<<<>>>[]

சட்டப்பேரவை உறுப்பினர்களால் பரிந்துரைக்கப்படும் திட்டங்கள் கட்சி பாகுபாடின்றி நிறைவேற்றப்படுவதாக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களது தொகுதியில் நீண்ட நாட்களாக தீர்க்கப்படாமல் உள்ள பத்து முக்கிய கோரிக்கைகளை முன்னுரிமைப்படுத்தி பரிந்துரைக்கும் திட்டம் குறித்து சட்டப்பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் திரு எடப்பாடி பழனிசாமி எழுப்பிய கேள்விக்கு பதிலளித்து அவர் பேசினார்.

அரசின் நிதிநிலைக்கு ஏற்ப சாத்தியப்படக்கூடிய திட்டங்கள் நிறைவேற்றப்படுவதாக முதலமைச்சர் தெரிவித்தார்.

[]<<<>>>[]

தமிழகத்தில் உள்ள ஆயிரம் கிலோமீட்டர் நீள ஊராட்சி ஒன்றிய சாலைகள் ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் இதர மாவட்ட சாலைகளாக தரம் உயர்த்தப்படும் என்று நெடுஞ்சாலை மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் திரு எ வ வேலு தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் இன்று தமது துறை மானியக்கோரிக்கை மீதான விவாதத்திற்கு பதிலளித்து பேசிய அவர், மாநிலத்தில் பத்து இடங்களில் 787 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ரயில்வே மேம்பாலங்கள் கட்டப்படும் என்றார்.

இதேபோன்று, திருச்சி, மதுரை உள்ளிட்ட ஆறு சாலைகளில் உயர்மட்டப் பாலங்கள் கட்டப்படுவதுடன், மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் இணைப்புச்சாலைகள் மற்றும் புறவழிச்சாலைகள் அமைக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

பொதுப்பணித்துறை சார்பில் கடலூர், காஞ்சிபுரம், திருவள்ளூர், ஒசூர் ஆகிய இடங்களில் புதிதாக நான்கு சுற்றுலா மாளிகைகளும், கல்வராயன் மலை, ஏற்காடு, பொள்ளாட்சி ஆகிய இடங்களில் ஆய்வு மாளிகைகள் கட்டப்படும் என்றும் திரு எ வ வேலு அறிவித்தார்.

[]<<<>>>[]

தமிழகத்தில் டாஸ்மாக்கில் நடந்த முறைகேடுகள் தொடர்பாக லஞ்ச ஒழிப்புத்துறை பதிவு செய்த வழக்குகளின் அடிப்படையிலேயே அதன் தலைமை அலுவலகத்தில் சோதனை நடத்தப்பட்டதாக அமலாக்கத்துறை இன்று சென்னை உயர்நீதிமன்றத்தில் தெரிவித்தது.

அமலாக்கத்துறை விசாரணை சட்ட விரோதமானது என அறிவிக்கக்கோரி தமிழக அரசு சார்பில் தாக்கல் செய்த மனு இன்று நீதிபதிகள் திரு எஸ் எம் சுப்ரமணியம், திரு கே ராஜசேகர் ஆகியோர் கொண்ட அமர்வு முன்பு இன்று விசாரணைக்கு வந்தது.

அப்போது அமலாக்கத்துறை சார்பில் தாக்கல் செய்யப்பட்ட பதில் மனுவில், இம்மாதம் ஆறாம் தேதி முதல் எட்டாம் தேதிவரை டாஸ்மாக் அலுவலகத்தில் நடத்தப்பட்ட சோதனையின்போது அதிகாரிகளோ, பணியாளர்களோ துன்புறுத்தப்படவில்லை என்று அமலாக்கத்துறை தெரிவித்துள்ளது.

இந்த சோதனையின்போது அதிகாரிகள் உணவு அருந்தவும். ஓய்வெடுக்கவும் அனுமதி வழங்கப்பட்ட பின்னரே வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டதாக அமலாக்கத்துறை தெரிவித்துள்ளது.

இதனையடுத்து அமலாக்கத்துறை இன்று தாக்கல் செய்த மனுமீது இம்மாதம் ஏழாம் தேதி பதில் மனு தாக்கல் செய்யும்படி தமிழக அரசுக்கு நீதிபதிகள் உத்தரவிட்டனர். வழக்கின் விசாரணை எட்டாம் தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

[]<<<>>>[]

பெரிய நிறுவனங்களை மட்டுமே மத்தியில் ஆளும் பிஜேபி தலைமையிலான அரசு ஊக்குவித்து வருவதாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலர் திரு டி ராஜா தெரிவித்துள்ளார்.

மதுரையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், கூட்டாட்சி நெறிமுறைகளுக்கும், ஜனநாயக மாண்புகளுக்கும் எதிராக மத்திய அரசு செயல்பட்டு வருவதாகக் குற்றம்சாட்டினார்.

மொழிக்கொள்கை, கல்விக் கொள்கை போன்ற விஷயங்களில் தமிழகம் முன் மாதிரியாக திகழ்கிறது என்றும் திரு டி ராஜா கூறினார்.

[]<<<>>>[]

தமிழகத்தின் கும்பகோணம் வெற்றிலை மற்றும் கன்னியாகுமரி மாவட்டம் தோவாளை பகுதியில் கட்டப்படும் பூமாலையான மாணிக்கமாலைக்கும் மத்திய அரசின் புவிசார் குறியீடு வழங்கப்பட்டுள்ளது.

தஞ்சையில் செய்தியாளர்களிடம் பேசிய புவிசார் குறியீட்டுக்கான அட்டர்னி திரு சஞ்ஜய்காந்தி இதனை தெரிவித்தார்.

*( வாய்ஸ்பைட் - சஞ்ஜய் காந்தி ) -42----- செகண்ட்*

[]<<<>>>[]

காஞ்சிபுரம் மாநகராட்சிக்கு உட்பட்ட திருக்காலிமேட்டில் செயல்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகளை ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் இன்று ஆய்வு செய்தார்.

[]<<<>>>[]

தூத்துக்குடி மாவட்டத்தில் கடந்த ஐந்து ஆண்டுகளில் காணாமல்போன ஒரு கோடி ரூபாய் மதிப்பிலான ஆயிரத்துக்கும் மேற்பட்ட செல்போன்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் திரு ஆல்பர்ட் ஜான் தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

திருச்சி விமான நிலையத்திலிருந்து பெங்களூருக்கு ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமானம் சேவையை தொடங்கியுள்ளது.

[]<<<>>>[]

திருவள்ளூர் மாவட்டம் திருவாலங்காடு வடாரண்யேஸ்வர சுவாமி திருக்கோவில் பங்குனி மாத பிரம்மோற்சவம் கொடியேற்றத்துடன் இன்று தொடங்கியது.

[]<<<>>>[]

கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம் அருகே உள்ள கல்லாரில் இ-பாஸ் வாகன சோதனை சாவடியை நீலகிரி மாவட்ட ஆட்சியர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு இன்று ஆய்வு செய்தார்.

[]<<<>>>[]

கொடைக்கானல் செல்லும் சுற்றுலா வாகனங்களுக்கு இ-பாஸ் முறை இன்று முதல் நடைமுறைக்கு வந்ததையடுத்து, பழனி அய்யம்புள்ளி சோதனை சாவடியில் தீவிர சோதனைக்குப் பின் வாகனங்கள் அனுமதிக்கப்படுகின்றன.

[]<<<>>>[]

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெற உள்ள ஆட்டத்தில் லக்னோ – பஞ்சாப் அணியை எதிர்கொள்கிறது.

லக்னோவில் இப்போட்டி இரவு மணி 7-30-க்கு தொடங்குகிறது.

[]<<<>>>[]

ஆசிய மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று இரண்டு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

ஜோர்டானின் அம்மானில் நடைபெற்ற இப்போட்டியில் ஆடவர் 92 கிலோ எடைப் பிரிவில் இந்தியாவின் தீபக் புனியாவும், 61 கிலோ எடைப்பிரிவில் உதித்-ம் வெள்ளப்பதக்கம் வென்றனர்.

125 கிலோ எடைப்பிரிவில் தினேஷ் வெண்கலப்பதக்கத்தை வென்றார்.

இப்போட்டியில் இந்தியா ஒரு தங்கம், மூன்று வெள்ளி, ஆறு வெண்கலம் என மொத்தம் பத்து பதக்கங்களை வென்றுள்ளது.

*End of News*